# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2467 - 2025 දෙසැම්බර් මස 12 වැනි සිකුරාදා - 2025.12.12

2467 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 4 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 17 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, சனவரி மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள**,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*



1 - B 82743- 403 (2025/12)

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

**சுற்றாடல் அமைச்சு**

**சட்ட அலுவலர் (நிறைவேற்று தர சேவை வகுதியின் தரம்-III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2025**

சுற்றாடல் அமைச்சில் நிறைவேற்று தர சேவை வகுதியின் தரம் - III சட்ட அலுவலர் பதவியில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

1. **ஆட்சேர்த்துக்கொள்ளும் முறை** :

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடையே, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை குழாமினால் நடாத்தப்படும் தகைமை களை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை யின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளுகின்ற விண்ணப்பதாரி வெற்றிடத்திற்காக ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவார். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட புள்ளிகள் வழங்கும் நடைமுறைக்கிணங்க (இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) தகைமை களை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2. **தேவையான தகைமைகள் :**

(i) **கல்வி / தொழில் தகைமைகள் :**

இலங்கை உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்;

(ii) **அனுபவம்:**

உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் சட்டத் தரணியாக மூன்று (03) வருடங்களிலும் குறையாத முனைப்பான தொழில்சார் அனுபவத்தைப் பெற்றிருத்தல். (முனைப்பான தொழில்சார் அனுப வத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் அனுபவத்தைப் பெற்றுக்கொண்ட காலம், உறுதிப்படுத்துபவரின் பதவி முத்திரை மற்றும் உறுதிப்படுத்திய திகதி என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.)

அல்லது

இலங்கை உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் அரச நிறுவனமொன்றில் சட்டம் சார்ந்த பதவியொன்றில் *மூன்று வருடங்களிலும் (03) குறையாத காலப் பகுதி கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புடைய அனுபவத்தைப் பெற்றிருத்தல். (செயலாளர் / திணைக்கள / நிறுவனத் தலைவரால் வழங்கப்படுகின்ற கடிதமொன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.)

I. வழக்குகள் தொடர்பான சட்ட அலுவல்கள் மற்றும் சட்ட மா அதிபர் திணைக்களத்துடனான ஒருங்கிணைப்பு அலுவல்களை மேற்கொள்ளல்.
II. உடன்படிக்கைகளுடன் தொடர்புடைய சட்ட ரீதியான அலுவல்கள்.
III. தொடர்புடைய சட்டங்கள், ஒழுங்குவிதிகளுடன் தொடர்புடைய சட்ட ரீதியான அலுவல்கள்.
IV. சட்டமூலங்கள், சுற்றறிக்கைகள், ஒழுங்குவிதிகள் போன்ற சட்ட ரீதியான எழுத்தாவணங்களை தயாரிக்கும் அலுவல்கள்.
V. பல்வேறு சட்டபூர்வ நிறுவனங்களினால் நடாத்தப்படும் சட்டம் அல்லது நீதிமன்ற நடவடிக் கைகள் அல்லது விசாரணை நடவடிக்கைகள்.

குறிப்பு : அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களில் விண்ணப்பதாரியினால் உறுதிப் படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும். சேவைக் காலம் ஆரம்பிக்கின்ற மற்றும் நிறைவடைகின்ற திகதி தெளிவாகக் குறிப்பிடப்பட்டிராத சான்றிதழ்கள் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படலாம்.

*சட்டம் சார்ந்த பதவி என்பதலிருந்து, சட்டத்துறையில் பட்டம் அல்லது உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல் ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகைமையைக் கொண்டுள்ள பதவிகள் எனக் கருதப்படும்.

(iii) **உடற் தகைமைகள் :**

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்று வதற்கும், பதவியின் அலுவல்களை

மேற்கொள்வதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) ஏனைய தகைமைகள் :

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி யன்று பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள் வதற்குத் தேவையான தகைமைகளை சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

I. இப் பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதிய உரித் துடையதாகும். தங்களுக்குரிய ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை அடிப்படையிலான தீர்மானத்திற்கு தாங்கள் உட்படுதல் வேண்டும். தாங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைக்கு / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைக்கு பங்களிப்புச் செலுத்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் விதத்தில் தாங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

II. இந்த நியமனம் மூன்று (03) வருட கால தகுதி காண் காலத்திற்கு உட்பட்டதாகும். பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டு மூன்று (03) வருட காலத்தினுள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப் பிடப்பட்டுள்ள விதத்தில் முதலாவது வினைத் திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

III. 2020.10.16 ஆம் திகதிய 18/2020 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய, உரிய ஏனைய அரச கரும மொழி / மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

IV. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்களம் சார்ந்த ஏனைய பணிப்புக்களுக்கும் இந்த நியமனம் உட்படுதல் வேண்டும்.

V. கோரப்படுகின்ற மொழிமூலத்தை பின்னர் மாற்றிக்கொள்வதற்கு இடமளிக்கப்பட மாட்டா தென்பதோடு, தங்களால் விண்ணப்பத்தில் குறிப் பிடப்பட்ட மொழிமூலமே தாங்கள் நியமனத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக் கொள்ளும் மொழிமூலமாகும்.

4. **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத் திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய இந்தப் பதவிக்குரித்தான மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூபா 82,150-10x2,400-8x2,940-17x3,900-ரூபா195,970.00 (SL-1-2025) ஆகும். அந்த சுற்றறிக்கையின் ஏற்பாடு களுக்கமைய அதன் அட்டவணை III இல் குறிப்பிடப் பட்டுள்ள பிரகாரம் தங்களுக்கு சம்பளம் செலுத்தப் படும்.

6. தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு கீழ் குறிப்பிடப்படும் புள்ளிகள் வழங்கும் நடைமுறை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

| *இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *உச்சளவு புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01. | **மேலதிக கல்வித் தகைமைகள் :** | | 25 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான முதுமாணிப் பட்டம் | 20 | |

| *இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *உச்சளவு புள்ளிகள்* |
|---|---|---|---|
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமா அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கல்வி நிறுவகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டப்பின் சட்ட டிப்ளோமா | 15 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட | | |
| | • முதலாம் வகுப்பு சித்தியுடனான சட்டமாணிப் பட்டம் | 15 | |
| | • இரண்டாம் வகுப்பு மேல்நிலை சித்தியுடனான சட்டமாணிப் பட்டம் | 10 | |
| | • வகுப்பு சித்தியுடனான சட்டமாணிப் பட்டம் | 07 | |
| | • சாதாரண சித்தியுடனான சட்டமாணிப் பட்டம் | 05 | |
| | (ஈ) சட்டக் கல்லூரியின் இறுதியாண்டில் முதலாம் வகுப்பு சித்தியைப் பெற்றிருத்தல் | 10 | |
| | (உ) சட்டக் கல்லூரியின் இறுதியாண்டில் இரண்டாம் வகுப்பு சித்தியைப் பெற்றிருத்தல் | 05 | |
| | **குறிப்பு I** : சட்டக் கல்லூரியின் இறுதிப் பரீட்சையில் சிறப்பு சித்தியைப் பெற்றிருந்தால் மாத்திரம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 05 புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>**குறிப்பு II**: உயர் தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | | |
| 02 | **மேலதிக அனுபவம்**<br>வழக்குகளுடன் தொடர்புடைய ஆவணங்களை தயாரித்தல் மற்றும் திறந்த நீதிமன்றில் விடயங்களை முன்வைத்தல் | | 35 |

| | வழக்குத் தாக்கல் (ஒரு வழக்கிற்கு) | நீதிமன்றில் தோற்றி விடயங்களை முன்வைத்தலுக்கான புள்ளிகள் (ஒரு வழக்கிற்கு) |
|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 2 | 5 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 2 | 4 |
| மேல் நீதிமன்றம் | 2 | 3 |
| மாவட்ட நீதிமன்றம் | 4 | 5 |
| நியாய சபைகள் | 2 | 3 |

**குறிப்பு** :
மேலே குறிப்பிடப்பட்ட தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக தொடர்புடைய வழக்குத் தீர்ப்புக்களின் பிரதிகள் அல்லது இறுதியாக வழக்கு விசாரிக்கப்பட்ட திகதியின் வழக்கறிக்கையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை நேர்முகப் பரீட்சைக் குழாமிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

| *இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *உச்சளவு புள்ளிகள்* |
|---|---|---|---|
| 03 | **மொழித் தேர்ச்சி** | | **15** |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஆங்கில மொழியை பிரதான பாடமாக உள்ளடக்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டம். | 15 | |
| | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய மட்டத்தில் மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் (Moot Court Competitions) ஆங்கில மொழியில் காண்பித்துள்ள திறமை. | 12 | |
| | **ஒற்றையர் போட்டி**<br>I. முதலாமிடம் / சிறப்பான திறமை - 12<br>II. இரண்டாமிடம் - 10<br>III. மூன்றாமிடம்/ ஏனைய திறமைகள் - 08 | | |
| | **குழுப் போட்டி**<br>I. முதலாமிடம் / சிறப்பான திறமை - 10<br>II. இரண்டாமிடம் - 08<br>III. மூன்றாமிடம் / ஏனைய திறமைகள் - 06 | | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஆங்கில மொழிக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட டிப்ளோமா அல்லது வேறு நிறுவக மொன்றிலிருந்து ஆங்கில மொழிக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட SLQF 3 அல்லது அதனிலும் உயர் தர டிப்ளோமா அல்லது அரசாங்க பயிற்சி நிறுவனமொன்றிலிருந்து / அரசாங்க பயிற்சி நிறுவனமொன்றுடன்இணைந்தநிறுவனமொன்றிலிருந்துகுறைந்தது 1500 மணித்தியாலங்களைக் கொண்ட பாடநெறியொன்றைப் பயின்று பெற்றுக்கொண்ட ஆங்கில மொழி டிப்ளோமா. | 10 | |
| | (ஈ) க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் (உள்நாடு அல்லது இலண்டன்) ஆங்கில மொழிக்கு குறைந்தது அதி திறமை சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது IELTS மொத்தப் புள்ளி 6.5 அல்லது அதனிலும் அதிகம், TOEFL-IBT 79 அல்லது அதனிலும் அதிகம், TOEFL-CBT 213 அல்லது அதனிலும் அதிகம் அல்லது TOEFL-PBT 550 அல்லது அதனிலும் அதிகமாக இருத்தல். | 08 | |
| | (உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஆங்கில மொழிக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட உயர் சான்றிதழ் அல்லது வேறு நிறுவனமொன்றி லிருந்து ஆங்கில மொழிக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட SLQF 2 மட்ட சான்றிதழ். | 05 | |
| | குறிப்பு : உயர் தகைமைகளுக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும். | | |
| 04 | **தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய சட்டம் பற்றிய அறிவு** | | 10 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப் பாட நெறிக்காக தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி விஞ்ஞானத்தை பிரதான பாட மொன்றாக கற்றிருத்தல். | 10 | |

| *இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *உச்சளவு புள்ளிகள்* |
|---|---|---|---|
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்டுள்ள பல்கலைக்கழகம் அல்லது இலங்கை சட்டக் கல்லூரி அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவன மொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில்நுட்ப சட்டம் பற்றிய டிப்ளோமா. | 08 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்டுள்ள பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் பற்றிய டிப்ளோமா வேறு நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கணினி விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் பற்றிய NVQ 5 அல்லது அதனிலும் உயர் மட்டத்திலான டிப்ளோமா | 05 | |
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்டுள்ள பல்கலைக்கழகம் அல்லது இலங்கை சட்டக் கல்லூரி அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டத்துறை சார்ந்த பாடநெறிகளைப் பயின்று / பயிற்சித் திட்டங்களில் பங்குபற்றி பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் (ஒரு சான்றிதழுக்கு 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சமாக இரண்டு சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.)<br>குறிப்பு : உயர் தகைமைகளுக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும். | 04 | |
| 05 | **நேர்முகப் பரீட்சையின்போது காண்பிக்கும் திறமை** | | **15** |
| | பதவிக்குரிய வகிபாகத்தை நிறைவேற்றவதற்குப் பயன்படும் விண்ணப்பதாரியின் : | | |
| | ○ ஆற்றல்கள் (Strength questions) (02 புள்ளிகள்),<br>○ சந்தர்ப்பத்திற்கேற்ப தீர்மானமெடுக்கும் ஆற்றல் (Situational questions) (03 புள்ளிகள்) மற்றும்<br>○ திறமை (Competency questions) (10 புள்ளிகள்)<br>மதிப்பீட்டுக்குட்படுத்துவதனை நோக்கமாகக் கொள்ளப்பட்ட கேள்வி களுக்கு வழங்கப்படும் பதில்களுக்கமைய புள்ளிகள் வழங்கப்படும். | | |
| | **மொத்தம்** | | **100** |

7. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம் :**

சகல விதத்திலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப் பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படுவார்கள்.

நேர்முகப் பரீட்சையின்போது அனைத்து சான்றிதழ் களினதும் மூலப் பிரதிகள் மற்றும் விண்ணப்ப தாரியினால் உரிய பிரகாரம் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழ் குறிப்பிடப்படும் ஆளடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவு ஆணையாளரால் வெளியிடப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை :
(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

8. **விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் :**

(i) விண்ணப்பங்களை 2026.01.09 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், சுற்றாடல் அமைச்சு, "சொபாதம் பியச" இலக்கம் : 416/சீ/1, ரொபட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அன்றைய திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய விண்ணப்பதாரிகள்

அவர்களுடைய விண்ணப்பங்களை A4 அளவிலான தாளில் தயாரித்து, முதலாம் பக்கத்தில் இல. 01 முதல் 3.4 வரையும், இரண்டாம் பக்கத்தில் இல. 3.5 முதல் 6.0 வரையும், மூன்றாம் பக்கத்தில் இல. 7.0 முதல் 9.0 வரையும் அமையுமாறு தயாரித்து தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும்.

(iii) விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “சுற்றாடல் அமைச்சின் சட்ட அலுவலர் தரம்-III பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2025” எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், ஓய்வு பெற்ற அலுவலர், வசிக்கும் பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத்தாரிஸ், முப்படையைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், அரச அல்லது மாகாண அரச சேவையைச் சேர்ந்த நிரந்தரப் பதவியை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விஹாரையொன்றின் அதிபதி அல்லது தலைமைத் தேரர் அல்லது பிற மத ஸ்தலங்களுக்குப் பொறுப்பான தகைமையுடைய மதகுருமார்கள் ஆகியோரில் ஒருவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(v) தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையில் புணிபுரியும் அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை தாம் பணியாற்றும் திணைக்களத்தின் திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இத்துடன் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற்போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பான எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **பொய்யான தகவல்களை வழங்குதல் :**

தங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவலொன்று பொய்யானது அல்லது தவறானது எனத் தெரியவரின் தங்களுடைய விண்ணப்பதாரி நிலை இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவல்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் தெரியவந்தால் அதனுடன் தொடர்பான நடவடிக்கைகளின் கீழ் பணியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாதிருத்தல் அல்லது வெற்றிடங்களில் ஒரு பகுதியை நிரப்புதல் பற்றிய இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியதாகும்.

11. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரயோகங்களில் ஏதேனும் இணக்கமின்மைகள் அல்லது முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழிப் பிரயோகமே வலுப்பெறல் வேண்டும்.

12. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் தொடர்பில் அல்லது ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஏதேனும் சிக்கல் நிலைமை ஏற்பட்டால் அது சம்பந்தமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பின் பிரகாரம்,

செயலாளர்,
சுற்றாடல் அமைச்சு.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**சுற்றாடல் அமைச்சு**

**சட்ட அலுவலர் (நிறைவேற்று தர சேவை வகுதியின் தரம் - III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2025**

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

(விண்ணப்பிக்கும் மொழி மூலத்துடன் தொடர்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்
சிங்களம் -2 / தமிழ் - 3 / ஆங்கிலம் -4 )

**குறிப்பு** - விண்ணப்பிக்கும் மொழியை மாற்றுவதற்கு முடியாது.

1.0 1.1 முழுப் பெயர் (திரு./ திருமதி/ செல்வி) :........................................................
(சிங்களத்தில்/ தமிழில்) : ........................................................
உ- ம் : GUNAWARDHANA, M.G.B.S.K

1.2 முழுப் பெயர் : ....................................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ....................................................................................................................

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் ( திரு./ திருமதி/ செல்வி) :....................................................................................
(சிங்களத்தில் / தமிழில்) : ....................................................................................................................
உ - ம்: எம்.ஜீ.பி.எஸ்.கே. குணவர்தன

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் : ....................................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ....................................................................................................................

2.0 2.1 நிரந்தர முகவரி : ....................................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்) : ....................................................................................................................

2.2 நிரந்தர முகவரி : ....................................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ....................................................................................................................

3.0 3.1 பால் : ஆண் - 0 பெண் - 1 [ ]
(உரிய கூட்டினுள் எழுதவும்)

3.2 விவாக நிலை : விவாகமானவர் - 1 [ ]
(உரிய கூட்டினுள் எழுதவும்) விவாகமாகாதவர் - 2

3.3 பிறந்த திகதி : ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

3.4 2026.01.09 திகதியன்று வயது :வருடங்கள் : [ | | | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

3.5 தேசிய அடையாள அட்டை இல. : [ | | | | | | | | | | | ]

4.0 4.1 தொ.பே. இல. : நிலையான [ | | | | | | | | | ]

கையடக்க [ | | | | | | | | | ]

5.0 கல்வித் தகைமைகள்

| 5.1 பட்டம் | நிறுவகம் | திகதி |
|---|---|---|
| ........................... | ............................ | ................... |
| ........................... | ............................ | ................... |

6.0 உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த திகதி : ...............................

6.1 உயர் நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் 03 வருட கால அனுபவத்தை பூர்த்தி செய்த திகதி : .........

6.2 அரச நிறுவனமொன்றில் சட்டம் சார்ந்த பதவியொன்றில் 03 வருட கால அனுபவத்தை பூர்த்தி செய்த திகதி: ............

* அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள் / ஆவணங்களின் பிரதிகளை விண்ணப்பதாரியே உண்மையானதென உறுதிப்படுத்தி விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

7.0 விண்ணப்பங்களைக் கோருகின்ற அறிவித்தலின் இலக்கம் 06 இன் கீழான ஒவ்வொரு தகைமைகளையும் பெற்றுக் கொள்ளளுடன் தொடர்படைய விபரம் :-

7.1 மேலதிக கல்வித் தகைமைகள் : ....................................................................................................................
....................................................................................................................................................

7.2 மேலதிக தொழில்சார் அனுபவம் : ....................................................................................................................
....................................................................................................................................................

7.3 தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு: ........................................................................................................
........................................................................................................

7.4 மொழித் தேர்ச்சி : ........................................................................................................
........................................................................................................

* மேலதிக தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களை விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டியதில்லையென்பதொடு, அந்த ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிப்பதற்கு தயாராக வைத்திருத்தல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும்.

8.0 தாங்கள் குற்றமொன்றுக்காக எப்போதாவது நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? (ஆமெனில் விபரிக்கவும்)
........................................................................................................
........................................................................................................

9.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை எனவும், அனைத்துப் பகுதிகளும் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதெனவும், இதில் என்னால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனுமொரு விடயம் பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் அறியக் கிடைத்தால் நான் இப்பதவிக்குப் பொருத்தமற்றவர் எனவும், நியமிக்கப்பட்டதன் பின்னர் அறியக் கிடைத்தால் பணி நீக்கம் செய்வதற்கு ஆளாகுவேன் என்பதையும் நான் அறிவேன் எனவும், அனைத்து சட்ட விதிமுறைகளுக்கும் நான் உட்படுவேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

...................................... ..........................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

10.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கின்ற திரு. / திருமதி / செல்வி ....................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் ………………….. ஆம் திகதி எனது முன்னிலையில் கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

......................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்

முழுப் பெயர் :
பதவி :
திகதி :
(பதவி முத்திரையினால் உறுதிப்படுத்தல் வேண்டும்)

11.0 திணைக்களத் தலைவரின் பரிந்துரை:

மேலுள்ள விபரங்களையுடைய திரு./ திருமதி/ செல்வி ......................................................... என்பவர்

இந்த நிறுவனத்தில் பணியாற்றுபவரெனவும், அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையெனவும், பணி மற்றும் வருகை திருப்திகரமானதெனவும், அவருக்கு எதிராக எந்தவிதமான குற்றச்சாட்டுக்கள் இல்லையெனவும், இந்தப் பதவிக்காக அவர் தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியுமெனவும் / முடியாதெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்

பெயர்:
பதவிப் பெயர்:
முகவரி:
திகதி :
(பதவி முத்திரையைப் பதிக்கவும்)

12-167

## இலங்கை இராணுவத்தின் நிரந்தர படையின் பயிலிளவல் உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேரப்புச் செய்வதற்காக விண்ணப்பங்களை கோருதல்

1. இலங்கை இராணுவத்தின் நிரந்தர படைக்கு கெடெற் உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தெரிவு செய்யப்படும்; விண்ணப்பதாரர்களுக்கு இலங்கை இராணுவ கல்வியற் கல்லூரியில் பயிற்சி அளிக்கப்படும்.

2. இலங்கையில் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து வெளியேறும் கெடெற் உத்தியோகத்தர்களுக்கு பாதுகாப்புக் கற்கையில் இளமானி பட்டம் வழங்கப்படும். அவர்கள் 2ஆம் லெப்டினன்ட் நிலையில் அதிகாரவாணைக்கு நியமிக்கப்பட்டு தகைமைகளுக்கும் இலங்கை இராணுவத்தின் தேவைகளுக்கும் ஏற்ப இலங்கை இராணுவ நிரந்தரபடையின் படையணி ஒன்றிற்கு சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

3. **அடிப்படை தகைமைகள்:**

| | | |
|---|---|---|
| அ. | குடியுரிமை | : இலங்கையரான ஆண் குடிமகனாக இருத்தல் வேண்டும். |
| ஆ. | சிவில்அந்தஸ்து | : திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். |
| இ. | வயது | : 2026, மாச்சு 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்கும் 23 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். |
| ஈ. | உயரம் | : 5 அடி 6 அங்குலத்திற்கு (167.5cm) குறையாது இருத்தல் வேண்டும். |
| உ. | நிறை | : 52 கிலோவுக்கு (118 இறாத்தல்) குறையாது இருத்தல் வேண்டும். |
| ஊ. | மார்பு | : 32 அங்குலத்திற்கு குறையாது இருத்தல் வேண்டும். |
| எ. | பார்வைக் கூர்மை | : 6/6 (மூக்கு கண்ணாடி மற்றும் வில்லைபாவிக்காது) இருத்தல் வேண்டும். |
| ஏ. | உடல் பருமன் சுட்டி (B.M. Index) | : 18.5 Kg/m2-25Kg/m2 இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும். |

4. **கல்வித்தகைமைகள்:**

அ. க.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் மூன்று தடவைகளுக்கு மேற்படாதவாறு ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (சாதாரண சித்தி S) வேண்டும். சாதாரண பொதுப் பரீட்சையில் 30% புள்ளிகளை பெற்றிருத்தல் மற்றும் பல்கலைக்கழக சேர்ப்பு "YES" ஆக குறிப்பிட வேணும்

மற்றும்

ஆ. க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் (C) எட்டு (08) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்தி (C) பெற்றிருத்தல் அல்லது ஆங்கில பாடத்திற்கு சாதாரண சித்தி (S) மட்டும் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் ஆங்கில பாடத்திற்கு திறமை சித்தி (C) பெற்றிருத்தல் அல்லது ஆங்கில மொழிக்கான NVQ - 4 ஆம் மட்டத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றிடமிருந்து டிப்ளோமா/பட்டம் பெற்றிருத்தல். (NVQ சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)

அல்லது

இ. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட க.பொ.த (சாதாரண தரம்) மற்றும் க.பொ.த (உயர்தரம்) பரீட்சைகளுக்குச் சமமான சர்வதேசப் பரீட்சை ஒன்றில் (Pearson Edexcel GCSE, GCE மற்றும் Cambridge அல்லது மற்றவை) அதற்குச் சமமான சித்தியை பெற்றிருத்தல் வேண்டும் (மேலே உள்ள கட்டாயப் பாடங்கள் உட்பட).

ஈ. மேல் குறிப்பிடப்பட்ட தகைமைகளை மற்றும் 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர் தரம் பரீட்சையில் முடிவு எதிர்பார்க்கக்கூடியவர்களுக்கும் விண்ணப்பிக்கலாம்

**க:வே:** 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர் தரம் பரீட்சையில் முடிவு எதிர்பார்க்கக்கூடியவர்கள் இறுதி நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதியில் க.பொ.த. உயர் தரம் கல்வி தகைமைகளை மேல் குறிப்பிட்டவாறு நிறைவுசெய்திருக்க வேண்டும்.

5. **வேறு தகைமைகள் :**

தேசிய/சர்வதேச மட்டத்தில் விளையாட்டு, தலைமைத் துவம், வேறு சாதனைகளை பெற்றிருத்தல் மற்றும் பிற மொழிகளை கையாளக்கூடியதிறமை (சிங்களம் மற்றும் ஆங்கிலம் தவிர) விசேட தகைமைகளாக கருதப்படும்.

6. பொது:

அ. பயிற்சிக் காலத்தில் கெடெற் உத்தியோகத்தர்களுக்குத் திருமணம் முடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

ஆ. விண்ணப்பதாரர்கள் சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களும் ஆட்சேர்ப்புக்கு முன், இலங்கை இராணுவத்தால் நடாத்தப்படும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன் அதில் அவர்கள் தேர்ச்சி பெறல் வேண்டும்.

7. **சேவை நிபந்தனைகள்:**

அ. பயிற்சிக் காலத்தின் இறுதியிலிருந்து (அதிகாரவாணைக்கு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து) 10 வருடங்கள் கட்டாயமாக இராணுவ சேவையில் ஈடுபடுதல் வேண்டும். அதற்காக, இலங்கை இராணு வத்துடன் பிணை முறியொன்றிக்கும் ஒப்பந்தமொன்றிக்கும் உட்படுத்தப்படுவர்.

ஆ. பயிற்சிக் காலத்தில் கெடெற் உத்தியோகத்தர் ஒருவரின் மாத சம்பளம் ரூ. 105,415.80 ஆகும். (அனைத்து கொடுப்பனவுகள் அடங்கலாக). கெடெற் உத்தியோகத்தர் ஒருவராக சேவையாற்றும் காலப்பகுதியில் அவர்கள் எந்தவொரு சம்பள அதிகரிப்புக்கும் உரித்துடையவராக மாட்டார்.

இ. கெடெற் உத்தியோகத்தர்கள் இலங்கை இராணுவ கல்வியற் கல்லூரியில் 33 மாத கால பயிற்சியைப் பெறுதல் வேண்டும்.

ஈ. பயிற்சிக் காலப்பகுதியில் கெடெற் உத்தியோகத்தர்களின் அந்தஸ்து சாதாரண சிப்பாய்களுக்கு சமமாக இருக்கும் என்பதுடன் அவர்கள் இராணுவச் சட்டத்திற்க்கும் சிவில் சட்டத்திற்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

உ. பாடநெறியிலிருந்து விலகுதல்/நீக்குதல்:

(1) பயிற்சிக் காலப்பகுதியில் கெடெற் உத்தியோகத்தர் ஒருவர் தனது சுய விருப்பில் தனது அதிகாரவாணைக்கான அபேட்சகத்துவத்தை முடிவுறுத்துவாராயின் கெடெற் உத்தியோகத்தர் சார்பில் இலங்கை குடியரசுக்கு அதுவரை ஏற்க நேரிட்ட எல்லாச் செலவுகளையும் அவருடைய பாதுகாவலர் அல்லது பிணையாளர்கள் இலங்கை சோசலிச சனநாயக குடியரசுக்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

(2) கெடெற் உத்தியோகத்தர் ஒருவர் பயிற்சிக் காலத்தில் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் அல்லது துர்நடத்தை காரணமாக விலக்குதல், தனது மோசமான பாதுகாப்பு அறிக்கை, தன்னால் தவிர்க்க கூடிய காரணிகள் காரணமாகவோ அதிகாரவாணை வழங்கப்படுவதற்கு தகுதியற்றவர் என உத்தியோகத்தர்களினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில, உத்தியோகத்தர் சார்பில் இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசுக்கு ஏற்க நேரிட்ட எல்லாச் செலவுகளையும் அவருடைய பாதுகாவலர் அல்லது பிணையாளர்கள் இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசுக்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

(3) பாடநெறியிலிருந்து விலகிய, விலக்கப்பட்ட அல்லது மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் தகுதியற்றவர் என பயிற்சியிலிருந்து நீக்கப்பட்ட கெடெற் உத்தியோகத்தர் ஒருவருக்கு மீண்டும் இலங்கை இராணுவத்தின் கெடெற் உத்தியோகத்தர் ஒருவராக இணைந்து கொள்ள முடியாது.

8. **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் :**

இலங்கை இராணுவத்தின் நிரந்தர படையின் உத்தியோகத்தர்களாக இரண்டாம் லெப்டினன்ட் நிலையில் அதிகாரவாணைக்கு நியமிக்கப்படும் போது, அவர்கள் இலங்கை இராணுவத்தின் உத்தியோகத்தர்களுக்குரிய பின்வரும் சம்பள அளவுத் திட்டத்தில் வைக்கப்படுவார்கள்:

| *தொடர் இல.* | *பதவி* | *அரச முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2025 படி திரட்டிய ஊதியம்* | | *ஊதிய அதிகரிப்பு* |
|---|---|---|---|---|
| | | *2026* | *2027* | |
| 1 | இரண்டாம் லெப்டினன்; | ரூ.60,709.00 | ரூ.65,880.00 | நிரந்தரமான |
| 2 | லெப்டினன் | ரூ. 74,438.00 | ரூ. 82,150.00 | 30x2400 |

| தொடர் இல. | பதவி | அரச முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2025 படி திரட்டிய ஊதியம் | | ஊதிய அதிகரிப்பு |
|---|---|---|---|---|
| | | 2026 | 2027 | |
| 3 | கெப்டன் | ரூ. 86,601.00 | ரூ. 96,550.00 | 24x2400 |
| 4 | மேஜர் | ரூ. 94,710.00 | ரூ.106,150.00 | 22x2400 |
| 5 | லெப்டினன் கேணல் | ரூ. 97,192.00 | ரூ.109,090.00 | 17x2940 |
| 6 | கேணல் | ரூ. 117,857.00 | ரூ.133,570.00 | 17x3900 |
| 7 | பிரிகேடியர் | ரூ. 124,446.00 | ரூ.141,370.00 | 15x3900 |
| 8 | மேஜர் ஜெனரல் | ரூ. 136,575.00 | ரூ.156,000.00 | 12 x850 |
| 9 | லெப்டினன் ஜெனரல் | ரூ. 144,770.00 | ரூ.165,700.00 | 10 x4850 |
| 10 | ஜெனரல் | ரூ.157,063.00 | ரூ.180,250.00 | 7x4850 |

9. **ஏனைய கொடுப்பனவுகள் :**

பின்வரும் மாதாந்த கொடுப்பனவுகள் செலுத்தப்படும்:

அ. தகைமை கொடுப்பனவுகள்.

ஆ. இலவச உணவு அல்லது உணவுக் கொடுப் பனவுகள்.

இ. உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டிருக் கையில் அனுமதி குலைவுப்படி (Disturbance Allowance) (திருமணமான உத்தியோகத்தர் களுக்கு மட்டும்).

ஈ. சீருடை பேணல் கொடுப்பனவு.

10. பின்வரும் வசதிகள்/கொடுப்பனவுகள் செலுத்தப்படும்:

அ. உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டிருக் கையில் இலவச தங்குமிட வசதி.

ஆ. வாடகை வீடுகளில் வசிக்கும் போது மட்டுப் படுத்தப்பட்ட வீட்டு வாடகை.

இ. இலவச சீருடை.

ஈ. திருமணமான உத்தியோகத்தர்களுக்கு பணியாள் படி (Batmen Allowance) அல்லது திருமணமாகாத உத்தியோகத்தர்களுக்கு பணியாள் சேவை (Batmen services).

உ. உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு வேலைத்தளத்திலிருந்து வீடு வரை பிரயாணம் செய்வதற்கு மாதத்திற்கு ஒரு தடவை புகையிரத ஆணைச்சீட்டொன்று.

11. சம்பளம் மற்றும் அடுத்த கட்ட சேவை நிபந்தனைகள் தொடர்பில் பின்வரும் ஒழுங்குவிதிகள் உத்தியோகத்தர் களுக்குப் பொருந்தும்:

அ. அரச முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2025.

ஆ. இராணுவ சம்பளக் கோவை.

இ. 1993 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 ஆம் திகதிய 780/7 ஆம்இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்ட காலத்திற்குக் காலம் திருத்தப்படட 1992 ஆம் ஆண்டின் இராணுவ உத்தியோகத்தர் (நிரந்தர படையணி) ஒழுங்குவிதிகள்.

ஈ. 1989 ஆம் ஆண்டு யூன் 15 ஆம் திகதிய 562/11 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக் கப்பட்ட காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் இராணுவ ஓய்வூதியமற்றும் சம்பளப் பணிக் கொடை பிரமாணக் குறிப்பு.

12. இங்கு கீழே பந்தி 13 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரகடனப் பத்திரமொன்றில் பெற்றோர் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடப்படல் வேண்டும் என்பதுடன், அதனை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்படி தெரிவு செய்யப் பட்ட விண்ணப்பதாரர்களை நியமிப்பதற்கு முன்னர் விண்ணப்பதாரர்;களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் பிரகடனத்தில் உள்ளவாறு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுடன் பிணைமுறியொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும். விசேட சந்தர்ப்பங்களை தவிர தந்தை உயிருடன்

இருக்கும் பயிலிளவல் உத்தியோகத்தர் ஒருவரின் பாதுகாவலராக தந்தை இருப்பார் என்பதுடன், அவர் உயிருடன் இல்லாதிருப்பின் மட்டும் தாய் அல்லது பாதுகாவலர் பாதுகாவலராக இருப்பார்.

13. விண்ணப்பதாரரின் தாய், தந்தை அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடப்பட வேண்டிய பிரகடனம்:

அ. நான், இலங்கை இராணுவத்தின் கெடெற் உத்தியோகத்தர் விண்ணப்பதாரரான .......................... என்பவரின் தந்தை/தாய்/பாதுகாவலர் ஆவேன்.

ஆ. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ பயிற்சி நெறியைத் தொடர தெரிவு செய்யப்படின், இங்கு பின்வரும் விடயங்கள் தொடரபிலான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

(1) பயிற்சிக் காலத்தின் போது விண்ணப்ப தாரருக்கு ஏற்க நேரிடும் அனைத்து தனிப்பட்ட செலவுகளையும் ஏற்றல்.

(2) மேற்கூறிய விண்ணப்பதாரர் பயிற்சிக் காலப்பகுதியில் சுய விருப்புடன் அதிகார வாணையிலிருந்து வெளியேறினால், அவர் சார்பில் அரசாங்கத்திற்கு ஏற்க நேரிட்ட அனைத்து செலவுகளையும் இலங்கை குடியரசிற்கு திருப்பிச் செலுத்துதல்.

(3) மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரர் பயிற்சிக் காலப்பகுதியில் எந்தவொரு சந்தரப்பத்திலும் (துர்நடத்தை காரணமாக அல்லது தனது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட காரணி காரணாக) அதிகாரவாணை பெறுவதற்குத் தகுதியற்றவர் என அதிகாரிகளினால் அறிக்கை சமர்ப்பிக்கப் படுமாயின், அவர் சார்பில் அரசாங் கத்திற்கு ஏற்க நேரிட்ட அனைத்து செலவு களையும் இலங்கை குடியரசிற்கு திருப்பிச் செலுத்தல்.

❖ பொருந்தாத சொற்களை வெட்டி விடுக.

.............................................
தாய்/தந்தை/பாதுகாவலரின் கையொப்பம்

பெயரும் முகவரியும் (தெளிவான எழுத்துக்களில்) : ...........
...........................
திகதி:...............................................................
சாட்சி கையொப்பம்:.......................................
பெயரும் முகவரியும் (தெளிவான எழுத்துக்களில்) : ...........
...............................

14. மொழித் தேவைகள். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்ப தாரர்கள், 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டத்திற்கும் அச்சட்டத்திற்கான திருத்தங்களுக்கும் அமைவாகவும், இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசகரும மொழிக் கொள்கையை அமுல் செய்வதற்கு காலத்துக்கு காலம் விதிக்கப்படுகின்ற சட்டத்திட்டங்களுக்கும் ஏற்ப செயற்படுதல் வேண்டும்.

15. அடையாளத்தை உறுதிப்படுத்தல். விண்ணப்பதாரர்கள் தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆதாரங்களை சமர்ப்பித்தல் வேண்டும். இதற்காக ஆட்பதிவு திணைக்களம் அல்லது தபால் மா அதிபரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை மற்றும் மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட சாரதி அனுமதி பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

16. பொதுச் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை, அவர்கள் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் விடுவிக்க முடியும் என்ற திணைக்களத் தலைவரின் அத்தாட்சியுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

17. விண்ணப்பங்கள் விண்ணப்பப்படிவம் விண்ணப்ப தாரரின் சொந்தக் கையெழுத்தில் கீழே காட்டப் பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டு, 2026, சனவரி 31 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, ஆளனி நிருவாகப் பணிப்பகம், இலங்கைத் தரைப் படைத் தலைமையகம், பாதுகாப்பு தலைமையக கட்டிடத் தொகுதி, அக்குரேகொட வீதி, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'இலங்கை இராணுவ நிரந்தர படையில் குறுகியகால கெடெற் உத்தியோகத்தர் பாடநெறியின் பயிலிளவல் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். பிந்திக்கிடைக்கும் விண்ணப்பங்களும் கெடெற் விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேலும், இராணுவத் தலைமையகத்தினால் விண்ணப்பங்கள் விநியோகிக் கப்படவும் மாட்டாது. மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்வதற்கும் www.army.lk/officer எனும் இணையத்தளத்தினுள் பிரவேசிக்கவும்.

18. விண்ணப்பத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் நிழற் பிரதிகளை அனுப்புதல் வேண்டும்:

அ. பிறப்புச் சான்றிதழ்.

ஆ. கல்வித் தகைமைகளை அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழ்கள்.

இ. பாடசாலை விடுகைச் சான்றிதழ்.

ஈ. கிராம உத்தியோகத்தர் சான்றிதழ்.

உ. பொலிஸ் தடையகற்றல் சான்றிதழ்.

ஊ. விளையாட்டு மற்றும் இணைச் செயற்பாடு களுக்கான சான்றிதழ்கள்.

எ. விண்ணப்பதாரரை அறிமுகமான (நற்சாட்சிப் பத்திரமொன்றை வழங்கக்கூடிய ஒருவரிட மிருந்து) நபர்களிடமிருந்து அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களும் விண்ணப்பதாரர் இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சாட்சிப் பத்திர மொன்றும்.

ஏ. பொருத்தமான ஏனைய சான்றிதழ்கள்.

ஐ. மேலும், கிராம உத்தியோகத்தரினால் அல்லது சட்டத்தரணி ஒருவரினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் நிழற் பிரதியொன்றையும், அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 2″ x 21/2″ அளவிலான புகைப்படம் ஒன்றையும் அனுப்பி வைத்தல் வேண்டும்

19. நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல் மேற்கண்ட தேவைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் ஆரம்ப தெரிவுக்கு உட்படுத்தப்படுவார்கள். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் இராணுவத் தளபதியால் விதிக்கப்படுகின்றவாறு பரீட்சைகளுக்குத் தோற்றுதல் வேண்டும். பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்படுகின்ற தெரிவுக் குழுவின் முன்னால், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு இறுதியாக தெரிவு செய்யப்படுவார்கள்.

20. நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறுகின்ற இடம், நேரம் மற்றும் திகதி என்பன மின்னஞ்சல் முகவரி ஊடாக அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சை இலங்கை இராணுவ தலைமையகம், பாதுகாப்பு தலைமையக கட்டடத்தொகுதி, அக்குரேகொட வீதி, பத்தரமுல்ல எனும் இடத்தில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகளின் பயணச் செலவுகள் அல்லது பிற செலவுகள் எதுவும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசினால் மீள செலுத்தப்படமாட்டாது.

21. விண்ணப்பதாரி ஒருவரைப் பரிந்துரைக்க முயற்சி செய்யும் எவரும் நற்சான்றிதழொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்யலாம். விண்ணப்பதாரியொருவரின் தேர்வை எந்த வகையிலும் தூண்டுவது அல்லது செல்வாக்குச் செலுத்த முயற்சிப்பது விண்ணப்பதாரியை தகுதி இழக்கச் செய்யும்.

22. ஆட்சேர்ப்புக்குத் தகைமை பெறாத விண்ணப்ப தாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டாது. அத்தகைய விண்ணப்பதாரர்களினால் முன்வைக்கப் படுகின்ற மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது.

குறிப்பு : இந்த வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளது. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வாசகங்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படின், சிங்கள மொழிமூல வாசகம் மேலோங்கி நிற்கும்.

பீ கே ஜீ எம் எல் ரொட்ரிகோ
ஆர்எஸ்பீ சீடீஎப்-என்டீயூ பீஎஸ்சீ ஐஜி
லெப்டினன்ட் ஜெனரல்
இராணுவத் தளபதி

இலங்கைத் தரைப்படைத் தலைமையகம்
பாதுகாப்பு தலைமையக கட்டிடத் தொகுதி
அக்குரேகொட வீதி
பத்தரமுல்லை
2025 நவம்பர்.

12-182

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

## இணைந்த அலுவலர் சேவை வகுதியின் I ஆவது, II ஆவது மற்றும் III ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2025

**சேவை வகுதிகள்**

1. அபிவிருத்தி உதவியாளர்
2. திட்டமிடல் மற்றும் நிதி உதவியாளர்
3. முகாமைத்துவ உதவியாளர் (பட்டம்)

01. விண்ணப்பப் படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.donets.lk என்ற இணையத் தளத்தின் "Our Services" இற்குள் உள்ள "Online Applications- Recruitment Exams/E.B. Exams" இல் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், விண்ணப்பப் படிவங்களை நிகழ்நிலை (Online) மூலமாக மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளும் பணிகள் 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படுவதுடன், 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆம் திகதியன்று பி.ப 9.00 மணிக்கு நிறைவடையும். விண்ணப்பப்படிவத்தை நிகழ்நிலையூடாக சமர்ப்பித்த பின்னர், அதைப் பதிவிறக்கம் செய்து, அச்சிடப்பட்ட பிரதியில் உரிய பகுதிகளைக் கையெழுத்தினால் பூரணப்படுத்தி, விண்ணப்பதாரரின் கையொப்பத்தைச் சான்றுப்படுத்தி, உரிய நிறுவனத்தின் தலைவரின் சான்றுப்படுத்துகையுடன் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னரோ அல்லது அன்றைய தினத்திலோ இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெறும் வகையில் பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்க வேண்டும். இப் பரீட்சை 2026, மாச்சு மாதம் கொழும்பில் மட்டுமே நடைபெறவுள்ளது.

விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி வரை தாமதிப்பதால் ஏற்படும் எந்தவொரு பாதகமான நிலைமையையும் விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

02. i. இந்தப் பரீட்சையானது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் நடத்தப்படுகிறது. மேலும், பரீட்சை நடைபெறும் முறை மற்றும் பெறுபேறுகள் வெளியிடுதல் தொடர்பாக அவரால் விதிக்கப் படும் விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட வேண்டும்.

ii. பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்ப தாரர்களுக்கு விதிக்கப்பட்ட சட்ட விதிமுறைகள் வர்த்தமானி அறிவித்தலில் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இந்த விதிகள் மீறப்படும் பட்சத்தில், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் உள்ளாக நேரிடும்.

iii. இந்த அமைச்சின் கீழ் மேலே குறிப்பிடப்பட்ட சேவை வகுதிகளின் கீழ் நியமனம் பெற்ற உத்தியோகத்தர்கள் மாத்திரம், தத்தமது தரங் களுக்கேற்ப, கீழே உள்ள அட்டவணையில் அறிவிக்கப்பட்டுள்ளபடி, இந்த பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

| *தொடர் இலக்கம்* | *பரீட்சையின் பெயர்* |
|---|---|
| 01 | இணைந்த அலுவலர் சேவையின் I ஆவது வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2025 (இணைந்த அலுவலர் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக் கானது) |
| 02 | இணைந்த அலுவலர் சேவையின் II ஆவது வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2025 (இணைந்த அலுவலர் சேவையின் II உத்தியோகத்தர்களுக்கானது) |
| 03 | இணைந்த அலுவலர் சேவையின் III ஆவது வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2025 (இணைந்த அலுவலர் சேவையின் I உத்தியோகத்தர்களுக்கானது) |

03. **விண்ணப்பப் படிவங்கள் :**

நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மட்டுமே பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரரால் நிகழ்நிலையூடாக சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி மற்றும் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்ட அச்சிடப்பட்ட பிரதி (Printout) ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைத்த பின்னர், அந்த மென்பிரதி மற்றும் அச்சிடப்பட்ட பிரதி சரிபார்ப்படும் (Verify), செல்லு படியான விண்ணப்பப்படிவமொன்றாக திணைக் களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா/ ஏற்றுக்கொள்ளப் படவில்லையா என்பது குறித்து கணினி முறைமைக்குள் பிரவேசிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்துக்குக் குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரி மூலமாகவோ அறிவிக்கப்படும். நிகழ் நிலை விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்த முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப் பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தை (Instructions)

பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளுங்கள். விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும் போது அந்த அறிவுறுத்தல்களைத் தவறாமல் பின்பற்றுங்கள். விண்ணப்பப் படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்ற பின்னர் அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பூரணப்படுத்தப் படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

04. **பரீட்சைக் கட்டணம்:**

இந்த வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றும் விண்ணப்பதாரர்களிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது. அதற்கடுத்த தடவைகளில் ஒரு பாடத்திற்காகத் தோற்றினால், ரூபா 250.00 வீதம் பரீட்சைக் கட்டணம் அறவிடப்படும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்துவதற்கு, நிகழ்நிலை முறைமையில் வழங்கப்படும் பின்வரும் கட்டணச் செலுத்தும் முறையின் கீழ் மட்டுமே கட்டணததைச் செலுத்த வேண்டும்.

i. ஏதேனுமொரு வங்கி கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)
ii. இணையவழி கொடுப்பனவு வசதியுள்ள ஏதேனும் வங்கி பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கி நிகழ்நிலை வங்கி முறை (Online Banking Method of Bank of Ceylon)
iv. இலங்கை வங்கியின் ஏதேனும் கிளை மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:

(அ) மேலே குறிப்பிடப்பட்ட முறைகள் மூலம் கட்டணத்தைச் செலுத்தும் முறை தொடர்பான அறிவுறுத்தல்கள், பரீட்சைக்கான தொழில் நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் பெறப்பட்டமை குறித்த குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலமாகவோ அறிவிக் கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டும். பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்ட கட்டணச் செலுத்தும் முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துவதில் ஏற்படும் பிழைகளுக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எந்தவொரு காரணம் கொண்டும் திருப்ப வழங்கப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

05. பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத் திற்கும் மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

i. தேசிய ஆளடையாள அட்டை,
ii. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச் சீட்டு,
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் முகம் மற்றும்பிற தொடர்புசாதனங்கள்அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக, காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள், அத்துடன், பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த தருணத்திலிருந்து பரீட்சை முடிந்து வெளியேறும் வரை முகம் மற்றும் காதுகளை மறைக்காமல் இருக்க வேண்டும்.

06. விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ, வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியுடையவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன் அனுமானத்தின் பேரில், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே பரீட்சை அனுமதி அட்டைகள் நிகழ்நிலை மூலமாக மாத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள், தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இன்றி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அது தொடர்பான அறிவித்தல் ஊடாக விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி மூலமாகவும் அறிவிக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கவில்லை என்றால், அறிவித்தலில்ல குறிப்பிடப்பட்டுள்ள முறைப்படி இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் விசாரிக்க

வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றை சரியாகக் குறிப்பிட்டு, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு கோரிக்கை கடிதத்தை அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது, பரீட்சைத் திணைக்களம் வினவும் எந்தவொரு தகவலையும் உறுதிப்படுத்துவதற்காக, தம்மிடம் உள்ள விண்ணப்பப்ப படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தால் அதற்கான பற்றுச் சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பத்தை தபாலில் அனுப்பிய பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு ஆகியவற்றையும் தயாராக வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

07. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப் பட்ட பரீட்சை அனுமதி அட்டை வைத்திருக்கும் உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதியாக, திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவுகள் செலுத்தப்பட மாட்டாது.

08. பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழி மூலங்களில் மாத்திரமே நடத்தப்படும். அவற்றில், தாம் கல்வி கற்ற மொழி மூலத்திலோ அல்லது அரச கரும மொழியிலோ பரீட்சைக்குத் தோற்றலாம். எனினும், தோற்றும் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் மாத்திரமே விடையளிக்க வேண்டும். விண்ணப்பித்த மொழி மொழி மூலத்தை பின்னர் மாற்ற அனுமதிக்கப்படமாட்டாது.

09. விண்ணப்பத்திலும், பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்ப தாரர் தனது கையொப்பத்தை நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளில், தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

10. பரீட்சை ஒழுங்குவிதிகள் - ஒவ்வொரு வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைக்கும் தோற்றக்கூடிய உத்தியோகத்தர்களுக்கான பாடங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் பின்வருமாறு அமையும்.

10.1 இணைந்த அலுவலர் சேவையின் I ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை- 2025 (தரம் III உத்தியோகத்தர்களுக்கானது)

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் | சித்தியடைவதற்கான ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| 1. அலுவலக நடைமுறைகள் | 01 | 100 | 2 மணித்தியாலங்கள் | 40 |
| 2. கணக்கீட்டுச் செயற்பாடுகள் | 02 | 100 | 2 மணித்தியாலங்கள் | 40 |

10.1.1 **அலுவலக நடைமுறைகள்** : அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக நடைமுறைகள் பற்றிய அடிப்படை அறிவு, அந்த அறிவை நடைமுறையில் பயன்படுத்தும் திறன், உத்தியோகபூர்வ கடிதங்கள் மற்றும் ஆவணங்களைப் புரிந்துகொண்டு, தெளிவான மற்றும் சுருக்கமான குறிப்புகள் மூலம் தமது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகளைத் துல்லியமாக முன்வைக்கும் திறன் மற்றும் கட்டளை களின்படி ஒரு கடிதத்தை வரைவு செய்யும் திறன் என்பன பரீட்சிக்கப்படும்.

10.1.2 **கணக்கீட்டுச் செயற்பாடுகள் :** அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அடிப்படைக் கணக்கு மற்றும் நிதிக் கட்டுப்பாட்டு ஏடுகள் பணி பற்றிய புரிதல்

10.2 இணைந்த அலுவலர் சேவையின் II ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2025 (தரம் II உத்தியோகத்தர்களுக்கானது)

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் | சித்தியடைவதற்கான ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| 1. நிறுவனச் செயற்பாட்டு ஒழுங்கு முறைகள் | 03 | 100 | 2 மணித்தியாலங்கள் | 40 |
| 2. நிதிப் பிரமாணம் மற்றும் அரச பெறுகைச் செயன் முறைகள் | 04 | 100 | 2 மணித்தியாலங்கள் | 40 |

10.2.1 **நிறுவனச் செயற்பாட்டு ஒழுங்குவிதி முறைகள்** : தாபன விதிக் கோவையின் பிரிவு VI, VII, VIII, IX, X, XI, XVI, XXV, XXVI, XXVII, XXIX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகள்.

10.2.2 **நிதிப் பிரமாணம் மற்றும் அரச பெறுகைச் செயன்முறை :** நிதிப் பிரமாணக் குறிப்பின் I, II, III, IV, V ஆவது அத்தியாயங்கள் மற்றும் அரசாங்க பெறுகைச் செயன்முறை.

10.3 இணைந்த அலுவலர் சேவையின் III ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2025 (தரம் I உத்தியோகத்தர்களுக்கானது)

| *பாடம்* | *பாட இலக்கம்* | *புள்ளிகள்* | *காலம்* | *சித்தியடைவதற்கான ஆகக் குறைந்த புள்ளி* |
|---|---|---|---|---|
| 1. பொது அறிவு | 05 | 100 | *2* மணித்தியாலங்கள் | 40 |
| 2. இலங்கைப் பொதுக் கல்வி தொடர்பான ஒழுங்குவதிகள் மற்றும் நியமங்கள் | 06 | 100 | *2* மணித்தியாலங்கள் | 40 |

10.3.1 **பொது அறிவு** : கல்வி அபிவிருத்தி தொடர்பில் ஏற்பட்டுள்ள சமகால மாற்றங்கள் தொடர்பில் பெற்றுள்ள பெற்ற அறிவு.

10.3.2 **இலங்கைப் பொதுக் கல்வி தொடர்பான ஒழுங்குவிதிகள் மற்றும் நியமங்கள் :** கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றுநிரூபங்கள், கையேடுகள் மற்றும் ஏனைய வெளியீடுகள் தொடர்பான அறிவு

11. ஒரு பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்குவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியைப்பூர்த்திசெய்துள்ளதாகஏற்றுக்கொள்வதாகக் கருதப்படக்கூடாது.

12. இந்தப் பரீட்சை அறிவித்தலின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்படாத எந்தவொரு விடயம் தொடர்பிலும் இந்த அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானது.

13. "சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் மொழி வசனங்களுக்கிடையே ஏதேனும் முரண்பாடு அல்லது பொருத்தப்பாடின்மைகள் காணப்பட்டால், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்".

நாலக களுவெவ,
செயலாளர்,
கல்வி, உயர் கல்வி மற்றும்
தொழிற் கல்வி அமைச்சு.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல,
2025, திசெம்பர் 02.

12-169

## கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில்சார் கல்வி அமைச்சு

## இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகாரசபை

## 2026 இரண்டாவது அரையாண்டுக்காக (சனவரி குழு) பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பித்தல்

இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகாரசபையின் (VTA) நாடு முழுவதிலும் அமைந்துள்ள தேசிய தொழிற் பயிற்சி நிறுவனங்கள், மாவட்டத் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் மாவட்ட மட்டத்தில் இயங்கும் ஏனைய தொழிற் பயிற்சி நிலையங்களில் நடைமுறைப்படுத்தும் தொழிற் பயிற்சிப் பாடநெறிகளுக்காக 2026 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டிற்காக (சனவரி குழு) பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த தொழிற் பயிற்சி நிலையங்களில் நடாத்தப்படும் NVQ (தேசிய தொழில் தகைமை) பாடநெறிகள் மற்றும் NVQ அல்லாத பாடநெறிகள் அவற்றின் குறியீட்டு எண்களின் கீழ் பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளன. மேலும், NVQ நிலை மற்றும் பாடநெறியின் கால அளவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடநெறிகளின் விபரங்களை அறிந்துக்கொள்ளுதல் மற்றும் பாடநெறிகள் பொருட்டு விண்ணப்பம் செய்தல் :

1. பாடநெறிகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள துரித தொலைபேசி இலக்கம் / மாவட்ட தொலைபேசி இலக்கம் ஊடாக மற்றும் WhatsApp தொலைபேசி இலக்கத்திற்கு SMS செய்திகள் அனுப்புவதன் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

2. உங்கள் மாவட்டத்திற்கு அருகிலுள்ள தொழிற்பயிற்சி அதிகாரசபையின் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம் / தேசிய தொழிற்பயிற்சி நிறுவனம் அல்லது கிராமிய நிலையம் சென்று விண்ணப்பங்களை நேரடியாகச் சமர்ப்பிக்கலாம்.

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள இணையப் பக்கத்திற்குச் சென்று, இணையவழி (Online) முறை மூலமாகவும் பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

பாடநெறி ஆரம்பம் - 2026 சனவரி 05
மேலதிக விபரங்களுக்காக -
தொலைபேசி
இலக்கம்(துரித) - 011-7270270
011-7277888
- 070-6767696 (Whatsapp)

மின்அஞ்சல் முகவரி - cgjp@vtasl.gov.lk
இணைய முகவரி - www.vtasl.gov.lk
ஃபேஸ்புக் பக்கம் - www.facebook.com/vta

தலைவர்,
இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை,
4 ஆம் மாடி, நிபுணதா பியச,
அல்விட்டிகல மாவத்தை,
நாரஹேன்பிட்டி,
கொழும்பு 05.

மாவட்ட நிலையங்கள் மற்றும் தேசிய பயிற்சி நிறுவனங்களின் தொலைபேசி இலக்கங்கள்

| | | |
|---|---|---|
| மாவட்ட நிலையங்கள் | | |
| 1 | அம்பாறை (சிங்களம்) | 063 – 2223821 / 071 – 1212013 |
| 2 | அம்பாறை (தமிழ்) | 067 – 2251155 / 071 – 0318732 |
| 3 | அனுராதபுரம் | 025 – 2221400 / 071 – 0318745 |
| 4 | பதுளை | 057 – 2223043 / 071 – 7272667 |
| 5 | மட்டக்களப்பு | 065 – 2050753 / 071 – 1783705 |
| 6 | கொழும்பு | 011 – 2844151 / 071 – 0318736 |
| 7 | காலி | 091 – 2234540 / 071 – 0318753 |
| 8 | கம்பஹா | 033 – 2294790 / 071 – 1361130 |
| 9 | ஹம்பாந்தோட்டை | 047 – 2241724 / 071 – 0318721 |
| 10 | யாழ்ப்பாணம் | 021 – 2227949 / 071 – 0318737 |
| 11 | களுத்துறை | 034 – 2263698 / 071 – 1040026 |
| 12 | கண்டி | 081 – 2387200 / 071 – 9660268 |
| 13 | கேகாலை | 035 – 2282565 / 071 – 8011109 |
| 14 | கிளிநொச்சி | 021 – 2285686 / 075 – 8024781 |
| 15 | குருநாகல் | 037 – 2237436 / 071 – 1038618 |
| 16 | மாத்தளை | 066 – 2286683 / 071 – 0318749 |
| 17 | மாத்தறை | 041 – 2235950 / 071 – 0318743 |
| 18 | மொனராகலை | 055 – 2274775 / 071 – 0318731 |
| 19 | முல்லைத்தீவு | 021 – 2290097 / 071 – 3956503 |
| 20 | நுவரெலியா | 052 – 2223216 / 071 – 1213423 |
| 21 | பொலன்னறுவை | 027 – 2245442 / 071 – 1314779 |
| 22 | புத்தளம் | 032 – 2254110 / 071 – 0318747 |
| 23 | இரத்தினபுரி | 045 – 2274699 / 071 – 0318714 |
| 24 | திருகோணமலை | 026 – 2234517 / 071 – 1211536 |
| 25 | வவுனியா | 024 – 2221617 / 071 – 1212253 |
| 26 | மன்னார் | 024 – 2221617 / 071 – 1212253 |
| **தேசிய தொழில் பயிற்சி நிறுவனங்கள்** | | |
| 1 | நாராஹேன்பிட்டிய | 011 – 2592233 / 071 – 5145255 |
| 2 | ரத்மலானை | 011 – 2638850 / 071 – 9476681 |
| 3 | பத்தேகம | 091 – 2293119 / 071 – 0318744 |
| 4 | நியாகம | 091 – 2296445 / 071 – 0796902 |
| 5 | மிரிஜ்ஜவில | 047 – 2220501 / 071 – 0318748 |
| 6 | தலல்ல | 041 – 2259331 / 071 – 1213609 |
| 7 | மட்டக்களப்பு | 065 – 2240159 / 071 – 0318729 |
| 8 | ஒருகொடவத்தை | 011 - 2072850 / 071 - 1315005 |

இலங்கைத் தொழில் பயிற்சி அதிகாரசபையிடமிருந்து கிடைக்கப்பெறும் நன்மைகள்

- திறன் அடிப்படையிலான பயிற்சி (CBT) மூலம் பாடநெறிகளைக் கற்றல்.
- தேசிய தொழிற்தகைமைச் சான்றிதழ் (NVQ) நிலை 03 மற்றும் 04 பெற்றுக்கொண்டதன் பின்னர் டிப்ளோமா மற்றும் தொழில்நுட்ப பட்டப்படிப்பைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு.
- தெரிவு செய்யப்பட்ட பாடநெறிகளுக்கு மாதாந்த கொடுப்பனவு.
- சலுகை விலையில் இலங்கை போக்குவரத்துச் சபை பயணச்சீட்டுகள்.
- தொழில் ஆலோசனைச் சேவை மற்றும் தொழில்சார் ஆங்கில அறிவு.
- தொழில்முனைவோர் அறிவு.
- தொழில்நுட்ப மேம்பாட்டு அறிவு.
- தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.
- மாதாந்த கொடுப்பனவுடன் மேலதிக பயிற்சி.
- உள்நாட்டு / வெளிநாட்டு வேலை வாய்ப்பு களுக்கான வழிகாட்டல்.
- சுயதொழில் வாய்ப்புகளுக்கான வழிகாட்டல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களைத் தொடங்கத் தேவையான தொழில்முனைவோர் பயிற்சி மற்றும் குறைந்த வட்டி கடன் வசதி களுக்கான வழிகாட்டல் சேவைகள்
- வணிக ஆலோசனைச் சேவைகள்.
- துறையில் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்து வதற்கான செயலமர்வுகள் மூலம் அறிவை இற்றைப் படுத்தல்
- பாடநெறிக் காலத்தில் இலவச ஆயுள் காப்பீட்டு வசதி.

மாதிரி விண்ணப்பம்

**இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை**

**2025 இரண்டாவது அரையாண்டுக்காக (யூலை குழு) பயிலுநர்களை ஆட்சேர்ப்புச்செய்தல்**

1. விண்ணப்பத்தாரியின் பெயர்: ..........................................................................................

2. முகவரி : ........................................................................................................................

3. வதிவிடம் : ....................................................................................................................

   i. கிராம அலுவலர் பிரிவு : .......................................................................................

   ii. பிரதேச செயலகப் பிரிவு :......................................................................................

   iii. மாவட்டம் : .......................................................................................................

4. தொலைபேசி இலக்கம் : .................................................................................................

5. பிறந்த திகதி : .................................................................................................................

6. தேசிய அடையாள அட்டையின் இலக்கம் : ..........................................................................

7. பெற்றுக்கொண்டுள்ள அதிகூடிய கல்வி தகைமைகள் : ........................................................

8. தங்களின் விருப்பம் மற்றும் தகைமைகளுக்கேற்ப பயிலுவதற்கு விரும்பும் பாடநெறிகள் மற்றும் நிலையங்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

| *பாடநெறிகளின் குறியீடு (Course Code)* | *பாடநெறி* | *NVQ நிலை* | *ஏற்புடைய நிலையம்* |
|---|---|---|---|
| | 1. | | 1. |
| | 2. | | 2. |
| | 3. | | 3. |

மேற்படி தகவல்கள் உண்மையானதெனவும் சரியானதெனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

திகதி: ....................................

.....................................
விண்ணப்பத்தாரியின் கையொப்பம்

தங்களது விண்ணப்பத்தை, பாடநெறி தெரிவு செய்யப்பட்ட மாவட்டத்திற்கு அண்மித்த நிலையத்திற்குச் சென்று கையளிக்கலாம். பாடநெறிகள் 2026 சனவரி 05 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை
பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026 இரண்டாவது அரையாண்டு (சனவரி குழு)

| *பாடநெறி குறியீடு (Course Code)* | *தொழில் பயிற்சி துறை பிரகாரம் செயற்படும் பாடநெறி* | | *NVQ Level 3* | *NVQ Level 4* |
|---|---|---|---|---|
| | | | *பாடநெறி காலம் (மாதம்)* | |
| | | **Automobile Repair & Maintenance**<br>**மோட்டார் வாகன பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு** | | |
| 01 | | National Certificate - Heavy Vehicle Operator (Fork Lift) தேசிய சான்றிதழ் - கனரக வாகன இயக்குபவர் (போர்க் லிஃப்ட்) | 6 | |
| 02 | AEM 3<br>AEM 4 | National Certificate - Agricultural Machinery & Equipment Mechanic<br>தேசிய சான்றிதழ் - விவாசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்தொழில் வல்லுநர் | 12 | 18 |
| 03 | AAM 3 | National Certificate - Automobile Air Conditioning Mechanic<br>தேசிய சான்றிதழ் - மோட்டார் வாகன குளிர்சாதனப் பொறிமுறை மெக்கானிக் | 6 | |
| 04 | AAT 4 | National Certificate - Automobile Air Conditioning Technician<br>தேசிய சான்றிதழ் - மோட்டார் வாகன குளிரூட்டல் தொழில்நுட்பவியலாளர் | | 12 |
| 05 | AE 3<br>AE 4 | National Certificate - Automobile Electrician<br>தேசிய சான்றிதழ் - மோட்டார் வாகன மின் மெக்கானிக் | 6 | 12 |
| 06 | AM 4 | National Certificate - Automobile Mechanic<br>தேசிய சான்றிதழ் - மோட்டார் வாகன மெக்கானிக் | | 12 / 18 |
| 07 | AP 4 | National Certificate - Automobile Painter<br>தேசிய சான்றிதழ் - மோட்டார் வாகன வர்ணப்பூச்சு செய்பவர் | | 6 |
| 08 | AT 4 | National Certificate - Automobile Technician<br>தேசிய சான்றிதழ் - மோட்டார் வாகன தொழில்நுட்பவியலாளர் | | 18 |
| 09 | ATi 3<br>ATi 4 | National Certificate - Automobile Tinker – தேசிய சான்றிதழ் -Automobile Tinker | 6 | 6 |
| 10 | MCM 3 | National Certificate - Motorcycle Mechanic<br>தேசிய சான்றிதழ் - Motorcycle Mechanic | 6 | |
| 11 | | National Certificate - Motorcycle Technician<br>தேசிய சான்றிதழ் – துவிச்சக்கரவண்டி தொழில்நுட்பவியலாளர் | | 6 |
| | | Building & Construction<br>கட்டிடங்கள் மற்றும் நிருமாணிப்புகள் | | |
| 12 | ALN 3<br>AL 4 | National Certificate - Aluminium Fabricator<br>அலுமினியம் Fabricator<br>- தேசிய சான்றிதழ் | 6 | 6 |
| 13 | ALFID 4 | National Certificate - Aluminium Fabrication with Interior Decoration<br>தேசிய சான்றிதழ் - அலுமினியக் கட்டுமானம் மற்றும் உட்புற அலங்காரம் | | 12 |

| பாடநெறி குறியீடு (Course Code) | தொழில் பயிற்சி துறை பிரகாரம் செயற்படும் பாடநெறி | | NVQ Level 3 | NVQ Level 4 |
|---|---|---|---|---|
| | | | பாடநெறி காலம் (மாதம்) | |
| 14 | CCM 3<br>CCM 4 | National Certificate - Construction Craftsman (Masonry)<br>தேசிய சான்றிதழ் - கட்டுமானக் கைவினைஞர் (Masonry) | 6 | 12 |
| 15 | DP 4 | National Certificate – Draughtsperson<br>தேசிய சான்றிதழ் – வரைவாளர் | | 12 |
| 16 | LT 4 | National Certificate - Landscaping Technician<br>தேசிய சான்றிதழ் - நிலப்பரப்பு வடிவமைப்பு தொழில்நுட்ப வல்லுநர் | | 6 |
| 17 | LDA 3 | National Certificate - Landscaping Development Assistant<br>தேசிய சான்றிதழ் - நிலப்பரப்பு மேம்பாட்டு உதவியாளர் | 6 | |
| 18 | PL 3<br>PL 4 | National Certificate – Plumber<br>தேசிய சான்றிதழ் – குழாய்ப் பொருத்துநர் | 6 | 12 |
| 19 | QS 4 | National Certificate - Quantity Surveying Assistant<br>தேசிய சான்றிதழ் - அளவு மதிப்பீட்டு ஆய்வாளர் உதவியாளர் | | 6 |
| | | Electrical, Electronic & Telecommunication<br>மின்சாரம், இலத்திரணியல் மற்றும் தொலைதொடர்பு | | |
| 20 | MW 3 | National Certificate - Electric Motor Winder<br>தேசிய சான்றிதழ் - மின் மோட்டார் கம்பி சுருள் அமைப்பவர் | 6 | |
| 21 | | National Certificate - Electric Mechanic Winder தேசிய சான்றிதழ் - மின் இயந்திரப் பழுதுநீக்குநர் | | 6 |
| 22 | EAMT 4 | National Certificate - Electrical Appliance Maintenance Technician<br>தேசிய சான்றிதழ் - மின் சாதனப் பராமரிப்பு தொழில்நுட்ப வல்லுநர் | | 12 |
| 23 | EL 3<br>EL 4 | National Certificate – Electrician<br>தேசிய சான்றிதழ் – மின் பணியாளர் | 6 | 12 |
| 24 | EAT 4 | National Certificate - Electronic Appliances Technician<br>தேசிய சான்றிதழ் - மின்னணு சாதன தொழில்நுட்ப வல்லுநர் | | 12 |
| 25 | MPR 3 | National Certificate - Mobile Phone Repairer<br>தேசிய சான்றிதழ் - அலைபேசி பழுதுநீக்குநர் | 6 | |
| 26 | SPST 4 | National Certificate - Solar Photovoltaic Systems Technician<br>தேசிய சான்றிதழ் - சூரிய ஒளிமின்னழுத்த அமைப்பு தொழில்நுட்ப வல்லுநர் | | 6 |
| | | Food Technology<br>உணவு தொழில்நுட்பம் | | |
| 27 | BAK 4 | National Certificate - Baker/ Commis I (Pastry & Bakery)<br>தேசிய சான்றிதழ் - பேக்கர்/கொமிஸ் பேஸ்ட்ரி மற்றும் பேக்கரி) | | 6 |
| | | Gem & Jewellery<br>இரத்தினக் கல் மற்றம் தங்காபரணம் | | |
| 28 | JM 4 | National Certificate - Jewellery Maker (Goldsmith)<br>தேசிய சான்றிதழ் - நகைத் தயாரிப்பாளர் | | 12 |

| பாடநெறி குறியீடு (Course Code) | | தொழில் பயிற்சி துறை பிரகாரம் செயற்படும் பாடநெறி | NVQ Level 3 | NVQ Level 4 |
|---|---|---|---|---|
| | | | பாடநெறி காலம் (மாதம்) | |
| 29 | JSS 3 | National Certificate - Jewellery Stone Setter<br>தேசிய சான்றிதழ் - நகை கல் பதிப்பாளர் | 6 | |
| | | Hotel & Tourism<br>ஹோட்டல் மற்றும் சுற்றுலா | | |
| 30 | B 3 | தேசிய சான்றிதழ் – காபி பெரிஸ்டர் | 6 | |
| 31 | FBA 4 | National Certificate - Food & Beverage Associate<br>தேசிய சான்றிதழ் - உணவு மற்றும் பானங்கள் உதவியாளர் | | 6 |
| 32 | GRO 4 | National Certificate - Guest Relation Officer<br>தேசிய சான்றிதழ் - விருந்தினர் தொடர்பு அதிகாரி | | 6 |
| 33 | PC 4 | National Certificate - Professional Cookery<br>தேசிய சான்றிதழ் - தொழில்முறை சமையற்கலை | | 6 |
| 34 | QSR 4 | National Certificate – Quick Service Restaurant (QSR) Crew Member<br>தேசிய சான்றிதழ் – துரித சேவை உணவகம் (QSR) பணியாளர் (Crew Member) | | 4 |
| 35 | RA 3 | National Certificate – House Keeping Services<br>தேசிய சான்றிதழ் – இல்லப் பராமரிப்புச் சேவைகள் | | 6 |
| | | Information Communication & Multimedia Technology<br>தகவல் தொடர்பு மற்றும் பல்லூடகத் தொழில்நுட்பம் | | |
| 36 | APCGD 4 | Adobe Certified Professional / Graphic Designer அடோப் அங்கீகாரம் பெற்ற நிபுணர் / வரைகலை வடிவமைப்பாளர் | | 6 |
| 37 | CGD 4 | National Certificate - Graphic Designer<br>தேசிய சான்றிதழ் - வரைகலை வடிவமைப்பாளர் | | 6 |
| 38 | CHDHI 4 | National Certificate - Graphic Designer (Hearing Impaired)<br>தேசிய சான்றிதழ் - வரைகலை வடிவமைப்பாளர் (காதுகேளாதோர்) | | 6 |
| 39 | CHT 4 | National Certificate - Computer Hardware Technician<br>கணினி வன்பொருள் தொழில்நுட்ப வல்லுநர் - தேசிய சான்றிதழ் | | 6 |
| 40 | CHTCi IT (A+) 4 | National Certificate - Computer Hardware Technician with CISCO IT Essential / A Puls தேசிய சான்றிதழ் - கணினி வன்பொருள் தொழில்நுட்ப வல்லுநர் (சிஸ்கோ தகவல் தொழில்நுட்ப அத்தியாவசியங்கள் / ஏ பிளஸ் உடன்) | | 6 |
| 41 | | National Certificate – CISCO CCNA / Network Technician தேசிய சான்றிதழ் – சிஸ்கோ சிசிஎன்ஏ / வலையமைப்பு - தொழில்நுட்ப வல்லுநர் | | 1440Hrs |
| 42 | CHNTCi IT (A+) 4 | National Certificate - Computer Hardware and Network Technician with CISCO IT Essential (A+) தேசிய சான்றிதழ் - கணினி வன்பொருள் மற்றும் இணைய தொழில்நுட்ப வல்லுநர் (சிஸ்கோ தகவல் தொழில்நுட்ப அத்தியாவசியங்கள் / A+ உடன்) | | 12 |

| *பாடநெறி குறியீடு (Course Code)* | *தொழில் பயிற்சி துறை பிரகாரம் செயற்படும் பாடநெறி* | | *NVQ Level 3* | *NVQ Level 4* |
|---|---|---|---|---|
| | | | *பாடநெறி காலம் (மாதம்)* | |
| 43 | ICT 4 | National Certificate - Information and Communication Technology Technician<br>தேசிய ச◌ான்றிதழ் - தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்ப வல்லுநர் | | 6 |
| 44 | ICT 3 | National Certificate – Computer Application Assistant<br>கணினிப் பயன்பாட்டு உதவியாளர் - தேசிய சான்றிதழ் | 4 | |
| 45 | MDA 4 | National Certificate - Multimedia Designing Associate<br>தேசிய ச◌ான்றிதழ் - பல்லூடக வடிவமைத்தல் உதவியாளர் | | 12 |
| 46 | SD 4 | National Certificate - Software Developer<br>மென்பொருள் உருவாக்குநர் - தேசிய சான்றிதழ் | | 12 |
| 47 | WD 4 | National Certificate - Web Developer தேசிய சான்றிதழ் - இணையதள உருவாக்குநர் | | 6 |
| | | Leather & Footware<br>தோல் மற்றும் காலணிகள் | | |
| 48 | LPC 3 | National Certificate - Leather Product Craftsman<br>தேசிய சான்றிதழ் - தோல் தயாரிப்பு கைவினைஞர் | 6 | |
| | | Metal & Light Engineering<br>உலோகம் மற்றும் Light பொறியியல் | | |
| 49 | FM 3<br>FM 4 | National Certificate - Fabricator (Metal)<br>தேசிய சான்றிதழ் - உருவாக்குநர் (உலோகம்) | 12 | 12 |
| 50 | M-CML 4 | National Certificate - Machinist (CNC Milling & Lathe Operator)<br>தேசிய சான்றிதழ் - இயந்திர தொழில்நுட்பவியலாளர் (CNC Milling & Lathe Operator) – | | 6 |
| 51 | M-CM 4 | National Certificate - Machinist (CNC Milling Operator)<br>தேசிய சான்றிதழ் - இயந்திர வல்லுநர் (CNC Milling) | | 6 |
| 52 | M 3<br>M 4 | National Certificate - Machinist<br>தேசிய சான்றிதழ் - இயந்திர வல்லுநர் | 12 | 12 |
| 53 | WE 3<br>WE 4 | National Certificate – Welder தேசியச் சான்றிதழி -வெல்டர்<br>Welder - வெல்டர் | 6 | 12 |
| 54 | WE-GATM 4 | National Certificate - Welder (GAS/ARC/TIG/MAG)<br>Welder (GAS/ARC/TIG/MAG) - தேசிய சான்றிதழ் Welder (GAS/ARC/TIG/MAG) | | 12 |
| | | Office Management<br>அலுவலக முகாமைத்துவம் | | |
| 55 | SEC 4 | National Certificate - Secretary (Secretarial Practice)<br>தேசிய சான்றிதழ் Secretary (Secretarial Practice) | | 12 |
| | | Personal & Community Development தனிநபர் மற்றும் சமூக | | |
| 56 | CHC 4 | National Certificate - Child Caregiver<br>தேசிய சான்றிதழ் – சிறுவர் பாதுகாப்பு | | 6 |

| *பாடநெறி குறியீடு (Course Code)* | | *தொழில் பயிற்சி துறை பிரகாரம் செயற்படும் பாடநெறி* | *NVQ Level 3* | *NVQ Level 4* |
|---|---|---|---|---|
| | | | *பாடநெறி காலம் (மாதம்)* | |
| 57 | BC 4 | National Certificate – Beautician<br>தேசிய சான்றிதழ் – அழகுக்கலை நிபுணர் | | 4 |
| 58 | HD 4 | National Certificate – Hair Dresser<br>தேசிய சான்றிதழ் – சிகை அலங்கார நிபுணர் | | 4 |
| 59 | PST 4 | National Certificate – Preschool Teacher (Early Childhood Development)<br>தேசிய சான்றிதழ் – முன்பள்ளி ஆசிரியர் ஆரம்பகால குழந்தை அபிவிருத்தி | | 12 |
| | | Printing & Packaging<br>அச்சிடல் மற்றும் பொதியிடுதல் | | |
| 60 | OLMO 3 | National Certificate - Offset Machine Operator<br>தேசிய சான்றிதழ் - ஆஃப்செட் அச்சு இயந்திரம் இயக்குபவர் | 6 | |
| | | Ref & Air-conditioning<br>குளிர்பதனம் மற்றும் காற்றுச் சீரமைப்பு | | |
| 61 | RAM 3 | National Certificate - Refrigeration & Air-conditioning Mechanic<br>தேசிய சான்றிதழ் - குளிர்பதனம் மற்றும் காற்றுச் சீரமைப்பு இயந்திர வல்லுநர்) | 12 | |
| 62 | RAT 4 | National Certificate - Refrigeration & Air-conditioning Technician<br>தேசிய சான்றிதழ் - குளிர்பதனம் மற்றும் காற்றுச் சீரமைப்பு தொழில்நுட்ப வல்லுநர் | | 12 |
| | | Textile & Garment<br>துணி மற்றும் ஆடை | | |
| 63 | ADT 4 | National Certificate - Apparel Design Technician<br>தேசிய சான்றிதழ் - ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப வல்லுநர் | | 12 |
| 64 | BA 3 | National Certificate - Batik Artist<br>தேசிய சான்றிதழ் - பத்திக் கலைஞர் | 6 | 6 |
| 65 | DMT 3<br>DMT 4 | National Certificate - Dress Maker / Tailor<br>தேசிய சான்றிதழ் - ஆடை தயாரிப்பாளர் / தையல்காரர் | 6 | 6 |
| 66 | ISMM 3<br>ISMM 4 | National Certificate - Industrial Sewing Machine Mechanic<br>தேசிய சான்றிதழ் - தொழில்துறை தையல் இயந்திர இயந்திர வல்லுநர் | 6 | 6 |
| 67 | ISMO 3 | National Certificate - Industrial Sewing Machine Operator<br>தேசிய சான்றிதழ் - தொழில்துறை தையல் இயந்திர இயக்குபவர் | 4 | |
| 68 | PM 4 | National Certificate - Pattern Maker<br>தேசிய சான்றிதழ் - வடிவமைப்பு தயாரிப்பாளர் | | 6 |
| 69 | PSS 4 | National Certificate - Production Supervisor (Sewing)<br>தேசிய சான்றிதழ் - உற்பத்தி மேற்பார்வையாளர் (தையல்) | | 6 |
| 70 | QAS 4 | National Certificate - Quality Assurance Supervisor (Apparel Production)<br>தேசிய சான்றிதழ் - தர உறுதி மேற்பார்வையாளர் (ஆடை உற்பத்தி) | | 6 |

| *பாடநெறி குறியீடு (Course Code)* | | *தொழில் பயிற்சி துறை பிரகாரம் செயற்படும் பாடநெறி* | *NVQ Level 3* | *NVQ Level 4* |
|---|---|---|---|---|
| | | | *பாடநெறி காலம் (மாதம்)* | |
| 71 | SCR 3 | National Certificate - Screen Printer<br>தேசிய சான்றிதழ் - திரை அச்சுப்பொறியாளர் | 6 | |
| 72 | TG 3<br>TG 4 | National Certificate - Tailor (Gents)<br>தேசிய சான்றிதழ் - தையல்காரர் (ஆண்கள் ஆடை) | 6 | 6 |
| 73 | IEO 4 | National Certificate - Industrial Engineering Officer (Work-Study) தேசிய சான்றிதழ் - தொழிற் பொறியியல் அதிகாரி (பணி ஆய்வு) | | 6 |
| | | Wood Related<br>மரம் சார்ந்த | | |
| 74 | WCA 3 | National Certificate - Wood Carving Artist<br>தேசிய சான்றிதழ் - மரச் சிற்பக்கலைஞர் | 6 | |
| 75 | WCB 3 | National Certificate - Wood Craftsman (Building)<br>தேசிய சான்றிதழ் - மர வேலைப்பாட்டு கைவினைஞர் (கட்டிடம்) | 6 | |
| 76 | WCBAL 3<br>WCBAL 4 | National Certificate - Wood Craftsman (Building) with relevant Aluminum Modules தேசிய சான்றிதழ் - மர வேலைப்பாட்டு கைவினைஞர் (கட்டிடம்) மற்றும் தொடர்புடைய அலுமினியப் பிரிவுகளுடன் | 6 | 12 |
| 77 | WCF 3<br>WCF 4 | National Certificate - Wood Craftsman (Furniture)<br>தேசிய சான்றிதழ் - மர வேலைப்பாட்டு (தளபாடம்) | 6 | 12 |
| 78 | WCFAL 3<br>WCFAL 4 | National Certificate - Wood Craftsman (Furniture) with relevant Aluminum Modules தேசிய சான்றிதழ் - மர வேலைப்பாடு (தளபாடம்) மற்றும் தொடர்புடைய அலுமினியப் பிரிவுகளுடன் | 6 | 12 |
| | | பாடநெறியின் பெயர் | NVQ Level 5 | |
| 79 | COSM 5 | National Diploma - Cosmetology தேசிய டிப்ளோமா - அழகுக்கலை (Cosmetology) | 840Hrs | |
| 80 | QS 5 | National Diploma - Quantity Surveying<br>தேசிய அளவு மதிப்பீட்டு ஆய்வாளர் டிப்ளோமா | 12 | |
| 81 | ICT 5 | National Diploma -Information and Communication Technology NVQ Level 05<br>தேசிய டிப்ளோமா - தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் NVQ Level 05 | 12 | |

## திருத்தம்

### கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப பிரிவு - 03 சேவைகள் வகுதிக்குரிய தொழில்நுட்ப உதவியாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025

1. மேலே குறிப்பிடப்பட்ட பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான 2,463 ஆம் இலக்க 14.11.2025 ஆந் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

   - கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப பிரிவு - 03 சேவைகள் வகுதிக்குரிய தொழில்நுட்ப உதவியாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2025 என்பது பின்வருமாறு :

     **'கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப பிரிவு - 03 சேவைகள் வகுதிக்குரிய தொழில்நுட்ப உதவியாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2025"**

   - பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள "மேலே உள்ள 4 மற்றும் 5 இன் கீழ் கல்வி மற்றும் தொழில்முறை தகுதிகளைப் பெற்றுள்ள மற்றும் எழுத்துப் பரீட்சையில் அதிக புள்ளி களைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுள் தகைமையுள்ள விண்ணப்பதாரர்கள் தொழில் நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்" என்பது பின்வருமாறு:

     **"மேலே உள்ள 4 மற்றும் 5 இன் கீழ் கல்வி மற்றும் தொழில்முறை தகுதிகளைப் பெற்றுள்ள மற்றும் எழுத்துப் பரீட்சையில் அதிக புள்ளி களைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுள் தகைமையுள்ள விண்ணப்பதாரர்கள் தொழில் நுட்ப உதவியாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்"**

2. அவ் அறிவித்தலின் ஏனைய நிபந்தனைகள் அவ்வாறே நடைமுறையில் இருக்கும்.

கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.

கமநல அபிவிருத்தி திணைக்களம்,
இல. 42, சேர் மார்கஸ் பிரனாந்து மாவத்தை,
கொழும்பு 07,
2025, நவெம்பர் 28.

12-188/1

---

## திருத்தம்

### கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

### இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025

2,463 ஆம் இலக்க 2025, நவெம்பர் மாதம் 14 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட "இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2025" எனும் அறிவித்தலின் 2.1 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026, சனவரி மாதம் 02 ஆந் திகதி பி. ப. 9.00 மணி வரையில் நீடிக்கப்படுகின்றது. அத்துடன் குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி மற்றும் ஏனைய அனைத்து விடயங்களும் அவ்வாறே வலுவில இருக்கும்.

நாலக களுவெவ,
செயலாளர்,
கல்வி, உயர் கல்வி மற்றும்
தொழிற் கல்வி அமைச்சு.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு,
இசுருபாய,
பெலவத்தை,
பத்தரமுல்ல,
2025, திசெம்பர் 08.

12-274

---

### கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

### இலங்கை அதிபர் சேவைக்கான ஆங்கில மொழிப் பரீட்சை - ஏனைய அனைத்து விடயங்களும் அவ்வாறே வலுவில் இருக்கும் - 2025 (2026)

2,464 ஆம் இலக்க 2025, நவெம்பர் மாதம் 21 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட "இலங்கை அதிபர் சேவைக்கான ஆங்கில மொழிப் பரீட்சை 2025 (2026)" எனும் அறிவித்தலின் முதலாம் பந்தி மற்றும் 07 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026, சனவரி மாதம் 09 ஆந் திகதி பி. ப. 9.00 மணி வரையில் நீடிக்கப்படுகின்றது. அத்துடன் குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்களும் அவ்வாறே வலுவில இருக்கும்.

நாலக களுவெவ,
செயலாளர்,
கல்வி, உயர் கல்வி மற்றும்
தொழிற் கல்வி அமைச்சு.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு,
இசுருபாய,
பெலவத்தை,
பத்தரமுல்ல,
2025, திசெம்பர் 08.

12-275

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*